scarce that they do not talk about these things. Anyway, at the committee meeting which was attended by leaders of all parties, we have come to a tentative decision with the objective that has been placed here by hon. Members. We should see that such occurrences do not take place as an annual or periodical affair, we should see to it that the slums are made safer, sounder and they are able to withstand all sorts of accidents.

### *Sri Ranganathaswami temple*

* 214 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government proposes to renovate the Sri Ranganathaswami temple at Srirangam; and

(*b*) if so, when and at what cost?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

THIRU K. VINAYAKAM: Is it a fact that the United Nations Fund has offered to give a very good slice of contribution for the renovation of the Srirangam temple and is it a fact that they are already at work on this scheme?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, திருவரங்கம் கோவில் திருப்பணியை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்று கூறினேன். அதற்கென்று தனித் திருப்பணிக் குழு சர். ஏ. ராமசாமி முதலியார் அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கோவிலினுடைய சிற்பக் கலை, அதனுடைய பல்வேறு கலைச் சிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இதற்கு உதவி செய்யவேண்டுமென்று யுனெஸ்கோவைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்க யுனெஸ்கோ பன்னிரண்டாயிரம் டாலர் அதற்கு நிதி வழங்க இசைவு தந்து, அதைச் சேர்ந்த ஒரு அதிகாரி பழம்பொருள் ஆராய்ச்சி வல்லுநர் வந்து பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கோவில் புனர்நிர்மாணத்தில், வைஷ்ணவ கோவில்களுக்குப் பணங்கள் ஜாஸ்தி வசூலாகிவிடும். சிவன் கோவில்களுக்கு அவ்வளவாக சூல் ஆவதில்லை. ஆகவே, சிவன் கோவில்களுக்கு விசேஷமாக 'ப்ரையாரிடி' கொடுத்து, அரசாங்கத்திலிருந்தும் கொஞ்சம் தொகை ஒதுக்கப்படுமா? (சிரிப்பு). Between Vishnu and Siva, Siva should be treated more sympathetically by the Government. Will the Government do it?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, யுனெஸ்கோ ஸ்தாபனம் திருவரங்கம் கோவிலுக்குக் கொடுப்பது கூட, சிற்பக் கலை சம்பந்தமான, ஆர்க்கியாலஜி சம்பந்தமான பணிக்குத்தான் அவர்கள் தருகிறார்களே தவிர, அதிலே இருக்கிற

1967 ஜூலை 8]

சமயச்சார்பான வேறு பல பணிகளுக்கு வேண்டிய தொகையைத் திரட்டும் பணியை இந்தக் குழுவினர்தான் மேற்கொண்டிருக்கிறார்கள். வைஷ்ணவக் கோவில்கள், சிவன் கோவில்கள் இருக்கும் நிலைமைகளைக் கனம் உறுப்பினர் அவர்களே அறிவார்கள். 108 திருப்பதிகள் என்றும் 1,008 சிவாலயங்கள் என்றும் சொல்லுவார்கள். சிவாலயங்களினுடைய எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது. அந்தக் கோவில்களினுடைய திருப்பணிகளுக்கான முயற்சியை கனம் உறுப்பினர் மேற்கொள்ளுவார்களானால், அதை அந்தக் கோவில்களின் தருமகர்த்தாக்களும் மேற்கொள்ளக் கூடும்.

**திரு. பி. வேலுசாமி:** கோவில்களிலே பணக்கார சாமி, ஏழை சாமி என்கிற வித்தியாசம் இருக்கிறது. பணக்கார சாமிக்குள்ள வருமானத்தை எடுத்து ஏழை சாமிக்குக் கொடுத்து உதவ அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அதிலாவது சமதருமம் நிலவுமா? (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது ஓரளவிற்கு அப்படித் தந்துகொண்டும் வருகிறது. திருப்பணியைப் பொறுத்த வரையில், பெரிய கோவில்களுக்குள்ள வரும்படியில் ஒரு பகுதி சில சிறிய கோவில்களின் திருப்பணிக்குச் செலவழிக்கப்பட்டு வருகிறது. சில பொது முயற்சிகளின் மூலமும் பல கோவில்களின் திருப்பணிகளுக்கு நிதி திரட்டப்படுகிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** கோவில்களை இப்படித் திருத்தி அமைக்கும்போது, முன்பிருந்த புராதனச் சிலைகள் அகற்றப்பட்டுப் பல இலட்ச ரூபாய்களுக்கு விற்கப்படுவதாகச் செய்திகள் அடிபடுகின்றனவே, அது உண்மையா? அப்படியானால், இனி மேலாவது கோவில்களில் உள்ள புராதனச் சிலைகளெல்லாம் பாதுகாக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** புராதனச் சிலைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. சில பல இடங்களில் சிலைகள் களவாடப்பட்டு விற்கப்பட்டதைக் குறித்து வழக்குகள் தொடரப்பட்டு, அதுசம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** யுனெஸ்கோவின் சார்பாக வெளிநாட்டிலிருந்து ஒரு கட்டடக்கலை நிபுணர் அனுப்பிவைக்கப்பட்டு, அவர் ஏதோ அந்தக் குழுவிற்குச் சில ஆலோசனைகளைத் தெரிவித்ததாகப் பத்திரிகையில் நாங்கள் படித்தோம். அவர் இந்தியக் கலைச் சிற்பங்களில் தேர்ச்சி பெற்றவராக இருக்க முடியாது என்று கருதப்படுகிறபடியால், அவருடைய ஆலோசனைகளை மேற்கொண்டு, மேற்படி கோவில் திருப்பணியைச் செய்வது என்பது சரியானதாக இருக்காது என்று அரசாங்கம் கருதி, அந்தக் கட்டடக் குழுவிற்கு ஏதாவது ஆலோசனை சொல்லுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** திருவரங்கம் கோவிலைப் பற்றி, அதற்கு உதவி செய்யவேண்டும் என்று அந்தக் கோவில் திருப்பணிக் குழுவினர் யுனெஸ்கோவைக் கேட்டுக் கொண்டார்கள். யுனெஸ்கோ ஸ்தாபனம் அதற்குப் பன்னிரண்டாயிரம் டாலர் உதவியளிக்க முன்வந்திருக்கிறது. ஆர்க்கியாலஜி, சிற்பக்கலை, மற்றவைகளைப்பற்றி ஆராய்வதற்கு யுனெஸ்கோவைச் சார்ந்த நிபுணர் அதுபற்றி ஆராய வந்தாரே தவிர, நமக்கு யோசனை சொல்லுவதற்கோ மற்றதற்கோ அல்ல. அது உள்ளபடியே சிற்பக்கலை நிறைந்த கோவில்தானு, அந்த சிற்பக்கலைக்கு உதவி செய்ய வேண்டியது யுனெஸ்கோவின் இன்றியமையாத தன்மைதானு என்பதையெல்லாம் யுனெஸ்கோவின் சார்பில் ஆராய்ந்து, யுனெஸ்கோவிற்கு யோசனை சொல்ல அந்த அதிகாரி வந்தாரே தவிர, அந்தக் கோவிலின் சிற்பக் கலை எப்படி இருக்க வேண்டும் என்று நமக்கு யோசனை சொல்ல அந்த அதிகாரி வரவில்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, பெரிய கோவில்களிலெல்லாம் மடைப்பள்ளி என்ற பெயரில் சமையல் அறை இருக்கிறது. சமையல் அறை இருக்கும் கோவில்களில் 'லெட்ரின்' கட்டாததன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதெல்லாம் சமயச் சார்புடைய தலைவர்கள் பதிலுரைக்க வேண்டிய கேள்வி.

### திரு. கள்ளழகர் தேவஸ்தனம்.

*215. வினு.—**திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) அழகர்கோவில், ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தான தர்ம கர்த்தாக்குழு தலைவர் தேர்தல் 29—3—1967-ல் நடக்க இருந்ததை மதுரை அறநிலைய டெபுடி கமிஷனர் அவர்கள் நிறுத்தி வைத்திருப்பது உண்மையா?

(இ) ஆம் என்ருல் அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) அழகர் கோவில், கள்ளழகர் தேவஸ்தான அறங்காவலர் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக, அறங்காவலர் மன்றம் திட்டமிட்டபடி 29—3—1967 அன்று கூடியது. மேற்படி கூட்டத்தின்போது, திரு. பி. அருணுசலம் அவர்கள் தலைவராக மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும், மேற்சொன்ன கூட்டம் விதிமுறைகளுக்கிணங்க நடத்தப்படவில்லை எனக்குறிப்பிட்டு, மதுரையிலுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்துறை துணைக் கமிஷனரிடமிருந்து அறிக்கை வந்ததால், திரு. பி. அருணுசலம் அவர்களைத் தேர்ந்தெடுத்த தீர்மானம் செயலுக்கு வருவதைச் சென்னையிலுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்துறை